29th August 1961] [Sri C. Subramaniam]

என்ற நிர்ப்பந்தம் கிடையாது, விதி கிடையாது. இருக்கக் கூடிய இரட்டை மெம்பர் தொகுதிகளைப் பிரிப்பது என்ற பிரச்சினையில், ஆலோசனை சொல்வதுதான் சர்க்காரின் பொறுப்பு. ஆலோசனைப் பொறுப்பு மட்டுந்தான். இதிலே, " adjournment motion '. ஆக வருவதற்கு இடமே கிடையாது. அதைப் பயன் படுத்திக் கொண்டு, எலெக்ஷன் கமிஷனைப் பற்றிக் குற்றம் சொல்லுவது மிகவும் வருந்தத் தக்கது. இனிமேல் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அரசாங்கம் நடு நிலைமை வகித்து, யோசனைக் கொடுத்திருந்தால், அது நலமாக இருந்திருக்கும். இதிலே எலெக்ஷன் கமிஷனைப் பற்றிய பிரச் சினையே கிடையாது.

· THE HON. SRI C. SUBRAMANIAM : எலெக்ஷன் கமிஷன் உரிமையைப் பற்றிச் சொன்னார்கள், அதனால் நான் அது தவறு என்று சொன்னேன். எதிர்க்கட்சிக்குப் பாதகமாக இருக் கிறது, கட்சி சார்பில் கொடுத்தார்கள், அதை ஒத்துக்கொண்டு எலெக்ஷன் கமிஷன் நடந்து விட்டது என்று சொல்வதைக் கண்டிக்கிறேன். தயவுசெய்து இனிமேல், இது எலெக்ஷன் கமிஷனாக இருந்தாலும் சரி, நீதி மன்றங்களாக இருந்தாலும் சரி, ஜாக்கிரதையாகப் பேசவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

DEPUTY SPEAKER : An adjournment motion should relate to an important matter and the matter should be urgent also. The matter raised by the hon. Member, Sri M. Kalyanasuudaram is no doubt important. But there does not seem to be any urgency. The subject is not so urgent as to warrant the adjournment of the business of the House to discuss it at once. This Government have no responsibility in the matter as required by Rule 50 (x) of the Assembly Rules as pointed out by Hon. the Leader of the House.

I, therefore, do not give consent to raise the matter.

III. ANNOUNCEMENTS

(1) BILL PASSED BY THE LEGISLATIVE COUNCIL.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Madras Preservation of Private Forests (Amendment Bill), 1961 (L.A. Bill No. 25 of 1961) has been passed by the Legislative Council without any amendment.

(2) AMENDMENTS TO THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960.

I have also to announce to the House that notice of amendments to the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 (L.A. Bill No. 8 of 1960) as amended by the Joint Select Committee should reach the Secretary to the Assembly before 5 p.m. on the 11th September 1961.